**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

**அறிவிப்பு**

# மின்திணை: அறிமுக வீடியோ தயாரித்தல் போட்டி

தமிழ்ப் பல்கலைக்கழகம் **"மின்திணை:** தமிழியல், மனிதவியல், சமூக அறிவியல், அறிவியல் பாடங்களில் மின்னணுக் கற்றல் வளங்கள்" (**MinTinai: e-Learning Resources in Tamilology, Humanities, Social Sciences and Sciences)** என்ற ஒரு திறந்த நிலைக் கற்றல்வள மையத்தை (Open Learning/Education Source centre) தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இணையதளம் வழி செயல்படுத்தவிருக்கின்றது. இதில் பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்களிடையே திறந்தநிலைக் கற்றலை வலுப்படுத்தக்கூடிய சொற்பொழிவுகள், பாடங்கள் இடம்பெறும்.

இதற்கான அறிமுகக் காணொளிப் படத்தைத் **தமிழில்** உருவாக்குவதற்காகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒரு போட்டியை அறிவித்துள்ளது.

இக் காணொளிப் படம் இசையுடன் 1 நிமிடத்திற்குள் அமையலாம், இதில் முதலில் கீழ்க்கண்ட சொற்றொடர்களுடன் தமிழ்ப் பல்கலைக்கழக இலச்சினையும் இடம் பெறவேண்டும்

"தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**MinTinai: e-Learning Resources in Tamilology, Humanities, Social Sciences and Sciences**

**மின்திணை:** தமிழியல், மனிதவியல், சமூக அறிவியல், அறிவியல் பாடங்களில் மின்னணுக் கற்றல் வளங்கள்"

"வணக்கம், யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற வரிகள் இடம்பெறலாம்.

பின்னர் குறிஞ்சி (மலை, மான் யானை, அருவி) , முல்லை (காடுகள் மாடுகள்), பாலை (வறண்ட நிலம், விலங்குகள்), மருதம் (ஆறு, நெல், வயல்கள்), நெய்தல் (கடல், மீன், கலங்கள்) நிலக்காட்சிகளும் இடம்பெறலாம். இதில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள துறைகள் தொடர்பான படங்கள் இடம் பெறலாம்.

இதற்கான ஒரு மாதிரியாக நடுவண் அரசின் **epgpathsala website**ல் (https://epgp.inflibnet.ac.in) உள்ள PG பாடங்களின் அலகுகளின் விடியோவைக் காணலாம். எகா. https://www.youtube.com/watch?v=vIdTeiROLGg&feature=youtu.be

**இதில் தேர்ந்தெடுக்கப்படும் காணொளிப் படத்திற்கு ரூ.5000 பரிசு வழங்கப்பெறும்.** இப்படம் தமிழ்ப் பல்கலைக்கழக மின்திணை திட்டத்தின் காணொளிப்படங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

இதன் மாதிரியை 30 மார்ச் 2019 க்கு முன்னர் கூகிள் டிரைவில் பதிவேற்றம் செய்து அதன் url ஐ tamilunivc@gmail.com, tamilunivc@gmail.com ஆகிய மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்பலாம்.

*போட்டி தமிழ்ப் பல்கலைக்கழக விதிமுறைகளுக்குட்பட்டது. பதிவாளர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

போன்: 04362 226720, 9442117151